**மார்ச் – 29**

**"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு." - எபே 2 : 8**

விழுந்துபோன மனுக்குலத்தின் அங்கங்களாக நாம் நம்முடைய பரிசுத்தமுள்ள தேவன் அங்கீகரிக்கக் கூடிய எந்த வேலையையும் செய்ய சக்தியற்றவர்களாயிருந்தோம். ஆகவே, கிறிஸ்தவர்களாக நம்முடைய தற்பொழுதுள்ள நிலை, பழைய சிருஷ்டி செய்த அல்லது செய்திருக்கக் கூடிய ஏதாவதொன்றின் பலனால் ஏற்பட்டதல்ல. இந்தப் படிப்பினை சம்பூரணமாக மெச்சப்பட வேண்டும். அல்லாவிட்டால், இடைவிடாது விழுந்து போதலின் அபாயத்திலிருப்போம். புது இருதயமும், மனதும், சித்தமும் பழைய சிருஷ்டியின் பரிணாமம் என்பதற்கு மாறாக அப்போஸ்தலன் இது ஒரு புதியதும் தனிப்பட்டதுமான சிருஷ்டி என்று தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். நாம் யேசு கிறிஸ்துவில் சிருஷ்டிக்கப்பட்டோம். இது தேவனின் வேலைப்பாடு. நற்கிரியைகளுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டோம். நற்கிரியைகளினால் அல்ல.

**- Z '03, 90 (R 3166).**

நாம் இரட்சிப்புக்குத் தகுதியுடையவர்களாக இல்லாதிருக்கும் போது, இரட்சிப்பை பரமபிதா, ஒரு தயவாக ஈந்திருக்கிறார். ஒவ்வொரு ஈவும் அல்லது ஆசிர்வாதமும் நாம் தகுதியற்றவர்களாயிருக்கையில் நமக்கு அவரிடமிருந்து கிடைக்கிறது. விசுவாசத்தை ஒரு நிபந்தனையாக அவர் கேட்கும் போது, நம்முடைய விசுவாசம் அவருடைய தயவுக்குத் தகுதியாயிருப்பது பிச்சைக்காரன் உரிமையாய் சம்பாதிப்பதை விட இதற்கு மேல் இல்லை. நீதிமான்களாக்கப்படுதலின் இரட்சிப்பும், தேவனுடைய அழைப்பின் இரட்சிப்பும் நமக்குக் கிடைத்திருப்பது, அவருடைய கிருபையினாலே. நமது மகா மேன்மையான உபகாரியை நாம் எவ்வளவு உயர்வாக மதிக்கவும், அவருக்கு நன்றி செலுத்தவும் வேண்டியவர்களாக இருக்கிறோம். **- P '34, 31.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

ரோம 3:19-5:2; 11:5,6; உபா 9:5; கலா 5:4; எபே 1:19; 2:5; 2தீமோ 1:9; மத் 16:17; ரோம 10:13,14,17; பிலி 1:29; யாக் 1:17; ரோம 11:28,29. **கோபுர வாசிப்பு : Z '90, 6 (R 1262).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்து அனுபவங்கள் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதில் உதவியாயிருந்ததும், இடையூறாயிருந்ததும் எது? அவற்றின் பலன் என்ன?